1974 மார்ச் 6]

வற்றிப்போய்விடுகிறது. அதன்காரணமாக அங்குள்ளவர்கள் இரண்டு மூன்று மைல்கள் தண்ணீருக்காகப் போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற அரிசன காலனிகளில் வசிக்கும் மக்களுக்காகவாவது விசேஷ திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தண்ணீர் வசதி இல்லாத அரிசன குடியிருப்புகளில் கிணறுவெட்டுகிறபோது, வெட்டப்பட்ட கிணறு உப்புத் தண்ணீராக ஆகிவிட்டாலோ, கிணற்றில் தண்ணீர் வற்றிப்போய்விட்டாலோ தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் குறையிருந்து தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : சென்ற ஆண்டு 17 லட்சம் குடிதண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கியதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் துரிதமாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது இல்லை என்ற புகார் வருகிறது. ஒதுக்கப்பட்ட 17 லட்சத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தைத் தருவார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேள்வி செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது பற்றியது. அதற்கான விவரங்களைச் சொன்னேன். இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

* 299 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken by the Government to supply drinking water for Harijans in Muthugoundenvalasu, Pungampadi Paravalasu, Myladi and Goundenpalayam in Chennimali Firka of Erode taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஈரோடு வட்டம் சென்னிமலை பிர்காவிலுள்ள முத்துகவுண்டன்வலசு, புங்கம்பாடி பரவலசு, மைலாடி, கவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள அரிசன மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை விபரங்களைக் காட்டும் விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 359–361-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.